©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 306] சென்னை, திங்கட்கிழமை செப்டம்பர் 25, 2017

புரட்டாசி 9, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II – பிரிவு 2

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களில் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

### அரசின் அறிவிக்கைகள்

### வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017க்கு பிழைத்திருத்தம்

*[அ.ஆ.நிலை. எண்.117, வணிக வரிகள் மற்றும் பதிவு (ஆ.1), 25 செப்டம்பர் 2017, புரட்டாசி 9, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048]*

**எண்.II(2) /வவப / 793 (ஊ) / 2017**

2017 ஜுன் 29ம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணமானதில் பிரிவு–2 பகுதி – II ன் பக்கங்கள் 143–முதல் 146 ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண். II(2)/சிடிஆர்/532(ஈ–16)/2017ல் பின்தொடரும் பிழைத்திருத்தம் வெளியிடப்படுகிறது.

பிழை திருத்தம்

மேற்கூறப்பட்ட அறிவிக்கைகளின், அட்டவணையில், வரிசை எண். 2 ற்கு எதிராக, நிரல் 2–ற்காக

| (2) |
|---|
| “வரிக்குட்பட்ட ஆட்சி பகுதியில் அமைந்துள்ள ஒரு வணிக நிறுவனத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தீர்ப்பாயம் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டவர் அல்லது எந்த நீதிமன்றத்தின் முன்பாகவோ பிரதிநிதித்துவ சேவை வாயிலாக ஒரு மூத்த வழக்கறிஞர் உள்ளிட்ட தனி வழக்கறிஞரால் வழங்கப்பட்ட சேவைகள், எங்கு ஒரு வணிக நிறுவனத்திற்கு சட்டசேவைகள் வாயிலாக வேறு ஒரு வழக்கறிஞர் அல்லது ஒரு வழக்கறிஞர் நிறுமம் அல்லது ஒரு வழக்கறிஞர்களின் நிறுமம் மூலமாக செய்யப்படும் அத்தகைய சேவைக்கான ஒப்பந்தத்திற்கு வழி வகை உள்ளதோ அவைகளையும் உள்ளடக்கியது”. |

படிக்க

| (2) |
| --- |
| “நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு மூத்த வழக்கறிஞர் உள்ளிட்ட ஒரு தனி வழக்கறிஞரால் அல்லது வழக்கறிஞர்கள் நிறுமத்தால், சட்ட சேவைகள் வழியாக செய்யப்படும் சேவைகள்.<br><br>விளக்கம்– ‘‘சட்ட சேவைகள்’’ என்பதன் பொருளானது அறிவுரை, ஆலோசனை அல்லது சட்டத்தின் ஏதாவது கிளையினில் உதவி தொடர்பாக வழங்கப்பட்ட எந்தவித சேவையும், மேலும் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகாரம் முன் வழங்கப்படும் பிரதிநிதித்துவ சேவைகள் உள்ளடக்கியதும் ஆகும்”. |

முனைவர் ச. சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் (மு.கூ.பொ)